33

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொதுக் கலைமாணித் தேர்வு - 2010/11 (வெளிவாரி) (மீள் பரீட்சை)
(ஜனவரி/பெப்ரவரி 2016)

27 APR 2016

## HC 101 இந்து நாகரிகமும் இந்து மெய்யியலும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. புராதன இலக்கியமாகிய வேதங்கள் கூறும் சமூக வாழ்வினை இன்றைய சமூக வாழ்வியலுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

2. நாயன்மார் பாடல்களில் இழையோடியுள்ள தத்துவார்த்த சிந்தனைகளை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

03. "இராஜராஜ சோழனின் உன்னதபணி இன்றைய தொழில்நுட்பத்தை விஞ்சியுள்ளது என்பது ஆய்வாளர்களது கருத்துக் கணிப்பாகும்." ஆராய்க.

04. உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவன பெறும் தத்துவார்த்த சிந்தனைகளை விபரிக்குக.
(அ) பிரம்மம்
(ஆ) கன்மம், மறுபிறப்பு
(இ) முத்தி

05. "இந்து மெய்யியல் மரபில் "சித்தர் மெய்யியல் தனித்துவமானவை" பரிசீலிக்குக.

06. ஆதி சங்கரர் முன்வைக்கும் அத்வைத சிந்தனைகளை மேல்வருவனவற்றை துணைக்கொண்டு விளக்குக.
(அ) ஏகான்ம வாதம் - விளக்கம்
(ஆ) ஆன்ம தத்துவம்
(இ) பிரபஞ்சம்

07. சைவ சித்தாந்தத்தில் 'பதி' பற்றிய கருத்துக்களை மேல்வருவனவற்றை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.
(அ) இறை இருப்பு
(ஆ) இயல்புகள்

08. எவையேனும் மூன்றினுக்கு விளக்கம் தருக.
(அ) விஞ்ஞானமும் - மெய்ஞ்ஞானமும்
(ஆ) மத்துவரும் ஐவகை பேதங்களும்
(இ) அவதார தத்துவம்
(ஈ) தத்துவத்திரயம்
(உ) புராண இதிகாசங்களில் அறிவியல் சிந்தனைகள்